03.09.2025.

## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

## விழுப்புரம்

## அமர்வு வழக்கு எண்.20/2019

அ.சா.21

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமலிங்கம் | | |
| த/பெ | அமாவாசை | | |
| கிராமம் | டி.எடைப்பாளையம் | தொழில் | தனியார் கம்பெனியில் செக்கியூரிட்டி பணி |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 52/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 03.09.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

### முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் உள்ள பிகையன் போர்ட்ஸ் என்ற தனியார் கம்பெனியில் செக்கியூரிட்டி பணி செய் து வருகிறேன்.எதிரி மோகன், ரவி ஆகியோர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்களை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்து போன அப்துல் ஜபார் என்பவரை எனக்கு தெரியும். அவரை எப்படி தெரியும் என்றால், அவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார். எங்கள் ஊரில் அவருக்கு நிலம் உள்ளது. அந்த நிலத்தில் ஒரு வீடு கட்டி அதில் எப்போதாவது தங்கி வருவார். அவர் தற்போது உயிருடன் இல்லை. அவரை கொலை செய்து விட்டதாக கேள்விப்பட்டேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் அவரை 2-30 மணிக்கு கொலை செய்து விட்டதாக 6.30 மணிக்கு கேள்விப்பட்டேன். 6.30 மணிக்கு நான் போய் பார்த்தேன். அன்று எதிரிகள் யாரையும் அப்துல் ஜபார் வீட்டின் அருகில் நான் பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை கொலை நடந்த இடத்தின் மெத்தை வீட்டில் வைத்து தான் விசாரணை செய்தார்கள். மேலே சொன்னது போல் தான் நான் சொன்னேன்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 27/06/2018 ம் தேதி மதியம் சுமார் 2.30 மணி அளவில் அப்துல் ஜபார் வீட்டின் பின்புறம் உள்ள நிலத்தில் நான் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அந்தக் கரும்பு வரப்பில் எங்கள் ஊர் காலனியை சேர்ந்த மோகன் அவரது தம்பி ரவி, பெங்களூரில் இருந்து அவர் வீட்டிற்கு வந்த ஒரு பையன் மூன்று பேரும் வேக வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அன்று மாலை 6.25 மணிக்கு எங்கள் ஊர் ஒய்வு பெற்ற உதவி ஆய்வாளர் அப்துல் ஜபார் என்பவர் பண்ணை வீட்டில் கொலை செய்யப்பட்டு கிடக்கிறார் என்று கேள்விப்பட்டேன் என்றும், நான் சென்று பார்த்தேன் என்றும், ஏற்கனவே அப்துல் ஜபாருக்கும், மோகனுக்கும் ஒரு பஞ்சாயத்தில் மோகனை அப்துல் ஜபார் அசிங்கப்படுத்தியது சம்பந்தமாக மோகன் விரோதம் கொண்டிருந்தார் என்றும், நான் பார்த்ததிலிருந்து அன்று மதியம் மோகன், ரவி,மற்றும் அவர்களுடன் பெங்களூரைச் சேர்ந்த ஒரு பையன் சேர்ந்து தான் கொலை செய்திருப்பார்கள் என்று எனக்கு சந்தேகம் உள்ளது என்று காவல்துறை விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில், எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**<u>இல்லை.</u>**

**<u>மறுவிசாரணை</u>**

**<u>இல்லை</u>**